*கவனிக்க.-2022.10.07 ஆந் திகதிய 2301 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

*கவனிக்க.-இவ் வர்த்தமானியின் பகுதி VI இல் கண்டி மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2302 - 2022 ඔක්තෝබර් මස 14 වැනි සිකුරාදා - 2022.10.14**

*2302 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 278 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) ஒதுக்கீடு சட்டமூலம் 2022, செத்தெம்பர் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) விமங்சா தம்மகுப்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஒற்றோபர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஶ்ரீ சீலானந்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2022, ஒற்றோபர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


277 - B 082391 - 353 (2022/10)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**இணைப்பு 09**

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கொடைப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (பிரிவு 104) தொடர்பான அறிவித்தல்**

இலங்கை மகாவலி அதிகார சபையின் வலவ வலயத்தின் வதிவிடக் கருத்திட்ட முகாமையாளரான லிந்தர முதியன்சேலாகே நயன பிரியந்த ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (04) ஆவது உப பிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியவர்களினால் 2005.04.10 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள, இலக்கம் හ/උව/සූ/ප්‍ර/1441 (ගොඩ) ஐ உடைய கொடைப் பத்திரத்தின் உரிமையாளரான 1467, ட 10, விஹாரகல, சூரியவெவவில் வசிக்கக் கூடிய வெல்லான கமகே விமலாவதீ என்பவருக்குக் கையளிக்கப்பட்டு, மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் ஹமீ/226/186/2005 இன் கீழ் 2005.10.03 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியாக உரிமையாளரொருவர் இல்லாததால் அல்லது உரிமையாளரொருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விரும்பாததால் பின்னுரிமைத் தன்மைக்கு எவருமில்லையெனஅறிக்கையிடப்பட்டிருப்பதால், அக் கொடைப் பத்திரத்தை மேற்குறித்த சட்டத்தின் (104) ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்புகள் காணப்பட்டால் அதனை 2022.10.31 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில் மாகம் பத்துவை சூரியவெவ கிராம அலுவலர் பிரிவின் விஹாரகல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்தின் வசமுள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டதுமான இலக்கம் ஏ.ශ.පි.4/101 ஐ உடைய துண்டம் பிரிக்கும் வரை படத்தில் இலக்கம் ஜீ 1474 ஐ உடைய காணித் துண்டமாகக் காட்டப்பட்டுள்ளதும், விஸ்தீரணத்தில் 0.110 ஹெக்டயார் அளவுள்ளதும், கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டதுமான அரச காணி.

வடக்கு : இலக்கம் ජී 1473 ஐ உடைய மேட்டு நிலம்;
கிழக்கு : இலக்கம் ජී 1475 ஐ உடைய சேற்று நிலம்;
தெற்கு : இலக்கம் ජී 1475 ஐ உடைய சேற்று நிலம்;
மேற்கு : இலக்கம் ජී 1585 ஐ உடைய மீதி இருப்பு ஏற்றுகை நிலம்.

எல்.எம்.என்.பிரியந்த,
வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலவ),
வலவ விசேட ஆளுகைப் பிரதேசம்,
எம்பிலிப்பிட்டிய.

எச்.ஜி. நிசாந்த ஜயதுங்க,
பிரிவு முகாமையாளர்,
இலங்கை மகாவெலி அதிகார சபை,
வலவ விசேட ஆளுகைப் பிரதேசம்,
சூரியவெவ.

2021, திசெம்பர் 28.

10 - 196